முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 978

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.06.2022, வெள்ளிக்கிழமை

1. தன்னார்வ தொண்டுமிக்க சீடர் பெருமக்களை
தவபலத்தால் உருவாக்கி கலியுகத்தில்
அண்ணலாக வாழுகின்ற அரங்கனே
ஆறுமுகன் என் அவதாரமே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 20 ம் நாள், 03.06.2022 வெள்ளிக்கிழமை)
ஆசிதனை சுபகிருது விடை திங்கள்
அரங்கன் சக்தி பெருக எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் வழி
தொண்டர் படைகள் பெருகி
உலகமெங்கும் ஞானவான்கள் ஆட்சி
கண்டடையக்கூடும் எந்தன் அருளாலே
4. கலியுகத்தை காக்கவந்த தவசி அரங்கன்
கண்ணியமிக்க சமூகத்தை உருவாக்கி
எண்ணமெல்லாம் ஞானவழி வந்து
இந்த உலகோர் அழியாமை பெறவேண்டி
5. வேண்டியே அற்புதத்தை நடத்தும்
வேலவன் என் சக்திமிகு அரங்கனை
தொண்டர்கள் ஏற்று வந்து
தொடர்ந்து தேசிகனின் நாமஜெபத்தைச் சொல்லி
6. சொல்லியே தர்ம வழிகளை
சுருதிபடி அகலாது தொடர்ந்து வந்தால்
வல்லமைமிக்க தொண்டர்களாக சீடர்களாக
வையகத்தில் வள்ளல் தன்மை நிரம்பி
7. நிரம்பியே அழியாமை என்கின்ற
நிலைத்தன்மை சக்தியை உலகோர் யாவரும் அடைந்து
பிழையற ஞான யுகமாற்றம்
பேராசான் அரங்கன் வழி உலகோர் படைப்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–